பக்கங்கள் 14+5

# மாலை முரசு


கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 18 ஞாயிற்றுக்கிழமை 31.03.2024 அதிர்வு 244

## மரண வீட்டில் அடிதடி! ஆறு பேர் படுகாயம்!!

மரண வீடொன்றில் ஏற்பட்ட தகராறு காரணமாக 6 பேர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சம்பவம் முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பில் இடம்பெற்றுள்ளது.

04





### தமிழ் பொதுவேட்பாளரைக் களமிறக்கி

# தமிழர்களின் வாக்குகளை சிதறடிக்க முயலாதீர்கள்!

### தமிழ்க் கட்சிகளிடம் ரணிலின் சகா வேண்டுகோள்

– சீ.ஏ. தமிழ்மாறன் –

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரைப் போட்டியிட வைத்து தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிக்கத் தமிழ்க் கட்சிகள் முயற்சிக்கக்கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன வலியுறுத்தியுள்ளார்.

தெற்கில் ஜனாதிபதித் தேர்தல் விவகாரமும், வடக்கில் தமிழ் பொதுவேட்பாளர் விவகாரமும் தற்போது சூடுபிடித்துள்ளன. இது தொடர்பில் வஜிர அபேவர்தன எம்.பி. கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலை உரிய நேரத்தில் நடத்தியே தீருவார். அவர் மூவின மக்களின் ஆதரவுடன் அந்தத் தேர்தலில் வெற்றியடைந்து ஜனாதிபதிப் பதவியில் தொடர்ந்து நீடிப்பார்.

04

# தமிழ் பொதுவேட்பாளர் யோசனை: அடியோடு நிராகரித்தார் சம்பந்தன்



(சீ.ஏ. தமிழ்மாறன்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்க வேண்டும் என்ற யோசனையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவருமான இரா.சம்பந்தன் எம்.பி. அடியோடு நிராகரித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழர்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்க வேண்டும் என்ற முன்மொழிவுக்குத் தமிழ் மக்களிடத்தில் ஆதரவு

04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally




# தந்தை செல்வாவின் 126 ஆவது ஜெயந்தி தின நிகழ்வு



(எஸ்.நிதர்ஷன்,
பிரபாகரன் டிலக்சன்)

தந்தை செல்வாவின் 126 ஆவது ஜெயந்தி தின நிகழ்வு இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு செல்வநாயகம் நினைவு அறைக் கட்டளையின் ஏற்பாட்டில் தென்னிந்தியத் திருச்சபையின் ஓய்வுபெற்ற யாழ். மாவட்ட பேராயர் ஜெபநேசன் தலைமையில் காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவு சதுர்க்கத்தில் இடம்பெற்றது.

தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு தந்தை செல்வாவின் சதுர்க்கத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மேற்படி நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், தமிழரசுக் கட்சியின் உப செயலாளர் குலநாயகம் மற்றும் அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.












# தந்தை செல்வாவின் 126 பிறந்த நாளில் திருகோணமலையில் மரியாதை நிகழ்வு!





(ஹஸ்பர் ஏ. எச்.)

ஈழத்துக் காந்தி என்று அழைக்கப்படும் தந்தை செல்வாவின் 126 ஆவது பிறந்த நாளை முன்னிட்டுத் திருகோணமலை சிவன் கோவிலடியில் அமைந்துள்ள அவரது சிலைக்கு இன்று (31) மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சி திருக்கோணமலை மாவட்டத் தலைவர் சண்முகம் குகதாசன், செயலாளர் கந்தசாமி செல்வராசா, மாவட்டக் கிளை உறுப்பினர் மற்றும் முன்னாள் நகர சபை உறுப்பினரா, கட்சி ஆதரவாளர் கலந்துகொண்டனர்.

# நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கற்பிட்டி கூட்டுறவு சபையில் இருவர் வெளியேற்றம்

(கற்பிட்டி சியாஜ்)

நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கற்பிட்டி கூட்டுறவு சபையில் இருவர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

கற்பிட்டி வரையறுக்கப்பட்ட பல நோக்கு கூட்டுறவு சங்க பொதுச் சபையின் தற்போதைய உறுப்பினர்களும் முன்னாள் தலைவர்களான இருவருக்கு எதிரான நம்பிக்கை இல்லாத் தீர்மாணம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை பொதுச் சபையின் 31 உறுப்பினர்களால் கையொப்பம் இடப்பட்டு கூட்டுறவுச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. இந்த முறைப்பாட்டுக்கு அமைய விசேட பொதுச் சபைக் கூட்டம் சனிக்கிழமை (30) சங்கத்தின் பிரதான அலுவலகத்தில் இடம்பெற்றது.

சங்கத்தின் பொதுச் சபையில் 58 உறுப்பினர்கள் காணப்பட்ட போதும் கூட்டத்துக்கு 42 உறுப்பினர்கள் மாத்திரமே சமூகமளித்தனர். அத்தோடு விசேட அழைப்பின் பெயரில் மாவட்ட கூட்டுறவு சங்கத்தின் உதவி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அதிகாரி ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

கற்பிட்டியின் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் விசேட பொதுச் சபைக் கூட்டம் ஆரம்பம் முதல் மிகவும் பரபரப்புடனும் வாதப் பிரதிவாதங்களுடன் குழப்பமான சூழல் காணப்பட்டது.

முன்னால் தலைவர்களாகவும் தற்போதைய உறுப்பினர்களாகவும் உள்ள றஸ்ஸாக் மற்றும் முஸம்மில் ஆகிய இருவருக்கும் எதிராக பொதுச் சபை அங்கத்தினர்கள் 31 பெயரின் கையொப்பத்துடன் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தொடர்பாக பகிரங்க வாக்கெடுப்புக்கு செல்வதா அல்லது இரகசிய வாக்கெடுப்புக்கு செல்வதா என்ற வாதப்பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டது. இறுதியில் இரகசிய வாக்கெடுப்புக்கு செல்வது என்ற தீர்மானமத்துக்கு அமைய வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இதில் இருவர் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தி கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லா தீர்மானத்துக்கு ஆதரவாக 22 வாக்குகளும் எதிராக 19 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஒரு வாக்கு நிராகரிக்கப்பட்டது. இதன்படி இரு உறுப்பினர்களுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கை இல்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இருவரையும் பொதுச் சபையின் அங்கத்துவத்தில் இருந்து வெளியேற்றுவது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# தமிழகம், புதுச்சேரி முதல்வர்களைச் சந்திக்க இந்தியா பறக்கவுள்ளார் அமைச்சர் டக்ளஸ்!

(ந.லோகதயாளன்)

இந்தியாவின் தமிழகம் மற்றும் புதுச்சேரி (பாண்டிச்சேரி) முதல்வர்களைச் சந்திப்பதற்குக் கடற்றொழில அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தியா பயணமாகவுள்ளார்.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டல் தொடர்பில் பேசுவதற்கு வருமாறு இந்தியாவின் புதுச்சேரி மாநில முதல்வர் என்.ஆர்.இரங்கசாமி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அழைத்திருந்தார். புதுச்சேரி மாநில முதல்வருடன் பேசச் செல்லும் சமயம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினையும் சந்தித்துப் பேச சந்தர்ப்பம் கோரி அமைச்சர் டக்ளஸ்



தேவானந்தா தமிழக முதல்வருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அனுப்பிய கடிதத்தை பரிசீலனை மேற்கொண்ட தமிழக முதல்வர் தமிழகத்தில் நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 19ஆம் திகதி இடம்பெறுவதனால் அக்காலத்தில் சந்திப்பை மேற்கொள்வது தொடர்பில் தேர்தல் ஆணையாளரின் அனுமதியைப் பெறவேண்டும் என்றும், எனவே, எதிர்வரும் 21 ஆம் திகதி சந்திக்க முடியும் என்றும் தற்போது பதிலளித்துள்ளார்.

இதற்கமைய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் புதுச்சேரி மாநில முதல்வர் என்.ஆர்.இரங்கசாமி ஆகியோரைச்

சந்திப்பதற்காக இலங்கையின் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தியா பயணமாகவுள்ளார்.

# தாலியை இழந்த பெண்! இரு இளைஞர்கள் கைது!!

(ந.லோகதயாளன்)

முகமாலை ஆரோக்கிய மாதா ஆலயத்துக்கு நேற்று நள்ளிரவு ஈஸ்டர் ஆராதனைக்காக வீட்டிலிருந்து புறப்பட்ட தாயார் ஒருவர் தாலியை இழந்துள்ளார்.

ஈஸ்டர் ஆராதனைக்காக வீட்டில் இருந்து புறப்பட்ட தாயார் ஒருவரிடம் மோட்டார் சைக்கிளை விட்டுச் சென்று விட்டு ஆராதனை முடிய வந்து எடுத்துச் செல்லவா என இரு இளைஞர்கள் வினவியுள்ளனர். ஆராதனைக்காகச் செல்லும் இளைஞர்கள் என நம்பி அந்தத் தாயார் வீட்டு வளவில் இடம் வழங்க முற்பட்ட சமயம் இரு இளைஞர்களும் அவரைத் தள்ளிவீழ்த்தி அவர் அணிந்திருந்த தாலியுடன் கூடிய மஞ்சள் கயிற்றை அறுத்துக்கொண்டு தப்பியோடியுள்ளனர்.

இதன்போது வீதியில் வீழ்ந்த தாயார் எழுப்பிய அவலக் குரல் கேட்டு வீட்டில் இருந்தோர் மற்றும் அயலவர்கள் சிலரும் இணைந்து 4 மோட்டார் சைக்கிளில் கொள்ளையர்களை விரட்டிச் சென்றுள்ளனர்.

இவ்வாறு விரட்டிச் சென்ற சமயம் பளைப் பொலிஸாருக்கும் ஆனையிறவுப் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டதையடுத்து பளைப் பொலிஸாரும் கொள்ளையர்களை விரட்டிச் சென்றுள்ளனர்.

இதன்போது ஆனையிறவில் காவல் கடமையில் இருந்த பொலிஸார் வேகமாகச் சென்ற கொள்ளையரர்களை வழிமறித்த சமயம் விரட்டிச் சென்ற கிராமத்தவர்கள் அவ்விடத்துக்குச் சென்றபோது பளைப் பொலிஸார் கொள்ளையர்கள் இருவரையும் கைது செய்தனர்.

இவ்வாறு கொள்ளையர்கள் கைது செய்யப்பட்ட சமயம் தாயாரிடம் இருந்து அறுத்துச் சென்ற தாலியின் மஞ்சள் கயிறு கொள்ளையர்களின் சட்டைப் பையில் இருந்தபோதும் தாலி இருக்கவில்லை. இதனால் கைது செய்தவர்களைப் பளைப் பொலிசார் மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தி வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**தமிழர்களின்...**

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரைக் களமிறக்கத் தமிழ்க் கட்சிகள் ஆலோசிக்கின்றனர். வடக்கிலுள்ள சில தமிழ்க் கட்சிகள்தான் இதில் ஆர்வம் காட்டி வருகின்றன. தமிழ் பொதுவேட்பாளராக யார் களமிறங்கினாலும் அவர் வெற்றியடையமாட்டார் என்பதைத் தமிழ்க் கட்சிகள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். எனினும், தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை வடக்கிலுள்ள தமிழ்க் கட்சிகள் களமிறக்கினால் அங்குள்ள மக்களின் வாக்குகள்தான் சிதறடிக்கப்படும். எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரைப் போட்டியிட வைத்து தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிக்கத் தமிழ்க் கட்சிகள் முயற்சிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கின்றேன்." – என்றார்.

**தமிழ் பொதுவேட்பாளர்...**

கிடையாது.

இந்த முயற்சியானது தமிழ் மக்களுக்கான சாதகமான நிலைமைகளை உருவாக்காது." – என்றார்.

எனினும், தமிழ் பொதுவேட்பாளர் விவகாரத்துக்குச் சில தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன. பிரதான கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி இது தொடர்பில் எதிரான நிலைப்பாட்டிலேயே உள்ளது. சம்பந்தனின் நிலைப்பாடும் இதனையே பிரதிபலிக்கின்றது.

**மரண வீட்டில்...**

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுதந்திரபுரம் மத்தி கிராமத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மரண வீடொன்றில் இடம்பெற்ற இறுதிக் கிரியைகளின்போது வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

வாய்த்தகராறு கைகலப்பாக மாறியதில் 6 பேர் காயமடைந்துள்ளனர். அதனையடுத்து, அவர்கள் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர், அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

சுதந்திரபுரம் மத்தி பகுதியைச் சேர்ந்த 61 வயதான குடும்பஸ்தர் ஒருவர் கடந்த 24ஆம் திகதி தென்னை மரத்தில் தேங்காய் பறிப்பதற்காக ஏறியபோது தவறி வீழ்ந்து காயமடைந்து, முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த 28ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

அவருக்கான இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை (29) சுதந்திரபுரம் மத்தி பகுதியில் உள்ள அவரது வீட்டில் இடம்பெற்றுள்ளது.

இறுதிக்கிரியையில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம் – வட்டுக்கோட்டையில் இருந்து உறவினர்கள் வருகை தந்துள்ளனர்.

அதன் பின்னர், வட்டுக்கோட்டையில் இருந்து வருகை தந்த இளைஞர்களுக்கும் சுதந்திரபுரம் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கும் மயானத்தில் வைத்து வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. தகராறு முற்றி அடிதடியில் இறங்கியதோடு, மரண வீட்டிலும் கத்திகளைக் கொண்டு தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் வட்டுக்கோட்டையில் இருந்து வருகை தந்த உறவினர்களில் மூவரும் சுதந்திரபுரம் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களில் மூவரும் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பின்னர், அவர்களில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நபர் ஒருவர் தீவிர சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# இணையத்தளம் ஊடான மோசடிகள் தொடர்பில் அவதானமாக இருங்கள்

## பொது மக்களை எச்சரித்துள்ளது பொலிஸ்

இணையத்தளம் ஊடான மோசடிகள் அதிகரித்துள்ளதால் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று பொலிஸ்துறை கணினி குற்றப்பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் பேஸ்புக் ஊடாக இடம்பெறும் மோசடிகளும் அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தின் முதல் 3 மாதங்களுடன் ஒப்பிடுகையில், இணையத்தளம் ஊடான மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகளில் சற்று அதிகரிப்பு காணப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சமூக ஊடகங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் அதிகரித்துள்ளன.

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் சமூக ஊடகங்கள் மூலம் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் 1,500 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று கணினி குற்றப்பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இவற்றில் பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களே அதிகளவில் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# நச்சுப் புகையை வெளியேற்றும் வாகனங்கள்; நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளது பொலிஸ்!

## மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவிப்பு

நாடெங்கிலும் ஆயிரக் கணக்கான வாகனங்கள் நச்சுப் புகையை வெளியேற்றி வரும் நிலையில், இது தொடர்பாக வழக்குத் தொடரவோ அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கவோ பொலிஸார் தவறிவிட்டது என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டத்தின்படி, மோட்டார் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸாருக்கு நச்சுப் புகையை வெளியேற்றும் வாகனங்களை சோதனை செய்து சட்டத்தை நடைமுறைப்படுத்தும் திறன் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இது தொடர்பாக பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என மோட்டார் போக்குவரத்து துறையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நச்சு கறுப்பு புகையை வெளியிடும் அரச வாகனங்கள் உட்பட்ட வாகனங்களுக்கு 2000 – 5000 ரூபாவுக்குக் குறையாமல் அபராதம் விதிக்க முடியும் என்ற போதிலும் பொலிஸார் கவனம் செலுத்த தவறியுள்ளனர் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அணிகள் உருவாகும் காலம் இது!

இன்னும் ஆறு மாதத்தில் நடக்கப் போகின்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆரவாரக் களை - சூடு - நாட்டைப் பீடித்து விட்டது.

இன்னும் ஒரு மாதத்தில் - மே முதலாம் திகதி - நடக்கும் மே தினக் கூட்டங்களோடு இந்தத் தேர்தல் பிரசாரம் உச்சம் தொடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கிடையில் கட்சிக் கூட்டுக்கள் - கன்னை பிரிவுகள் - அணிசேரல்கள் - தேர்தல் வியூகங்கள் - எல்லாம் உருக் கொண்டு விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புது அணிகள் சேரவும், இருக்கும் அணிகள், கூட்டுக்கள், கட்சிகள் உடையவும், பிளக்கவும் வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன என்பது துலாம்பரமாகி வருகின்றது.

ஏற்கனவே, தென்னிலங்கையில் பிரதான கட்சிகளுள் ஒன்றான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அடுத்த கட்டப் பிளவுக்கான சாத்தியங்கள் வெளிப்படையாகத் தென்படத் தொடங்கியுள்ளன.

ஏற்கனவே கட்சியில் எஞ்சியுள்ள எம்.பிக்களில் முக்கியமான மூவரைக் கட்சியின் பொறுப்புக்களில் இருந்து விடுவிக்கும் முடிவு கட்சியின் மத்திய குழுக் கூட்டம், நிறைவேற்றுக் குழுக் கூட்டம் மற்றும் தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்களுக்கான மாநாடு ஆகியவற்றில் ஏகமனதாக எடுக்கப்பட்டிருக்கின்றது.

கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்து துமிந்த திசநாயக்கவும், பொருளாளர் பதவியில் இருந்து லசந்த அழகியவண்ணவும், சிரேஷ்ட உப தவிசாளர் பதவியிலிருந்து மஹிந்த அமரவீரவும் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஜனாதிபதி ரணிலுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் இம்மூவரும் இதனால் ஜனாதிபதித் தேர்தல் வியூகத்தில் ரணிலுடன் சங்கமிக்க வேண்டியவர்களாகி விட்டனர். அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா போன்றோரின் கதி சு.கவில் எதிர்காலத்தில் எப்படி அமையும் என்பது தெரியவில்லை. நிமால் சிறிபால டி சில்வா போன்றோர் அமைச்சர் பதவிப் பித்தர்கள் என்பதால் அவர்களும் சு.கவை விட்டு ஒதுங்கி அல்லது வெளியேற்றப்பட்டு ரணிலுடன் சங்கமிக்கும் கட்டாயத்துக்குத் தள்ளப்படக்கூடும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் தீர்மானங்கள், நடவடிக்கைகள் குறித்து மொட்டுக் கட்சியின் தலைமை அதிருப்தியிலும், விசனத்திலும் இருப்பதாகத் தெரிகின்றது. தங்களின் தயவில் ஜனாதிபதியாகி விட்டு, தமது கட்சியையே சிதறடிக்க ரணில் தரப்பு கங்கணம் கட்டிச் செயல்படுவதாக மொட்டுத் தலைமை கருதுகின்றது.

இந்தப் பின்புலத்தில் நாளை பிறக்கும் ஏப்ரல் மாதத்தின் கடைசியில் இப்போதைய ரணிலின் அரசுக்கு வழங்கி வரும் ஆதரவை மொட்டுக் கட்சி உத்தியோகபூர்வமாக விலக்கிக் கொள்ளும் ஏது நிலைகள் தென்படுகின்றன எனக் கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அப்படி நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பாக இயங்காமல், தனிக் கட்சியாக மொட்டு இயங்கும் போது - அதுவும் ஜனாதிபதி தேர்தல் நெருங்கும் சமயத்தில் - தமது அரசைக் கொண்டு நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நெருக்கடிகளை எதிர்கொள்வார் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

மொட்டுக் கட்சியிலும், பிற எதிரணிக் கட்சிகளிலும் உள்ளவர்கள் அமைச்சுப் பதவிக்காக ஜனாதிபதி ரணிலின் அரசில் இணைந்து கொள்ளக் கூடும். அத்தகையோருக்கு அவரவரது தற்போதைய கட்சிகள் இனி நடக்கக்கூடிய பொதுத் தேர்தலில் இடமளிக்க மாட்டா என்பதும், அவர்கள் ரணில் புதிதாக அமைக்கும் கூட்டணியில்தான் வேறு வழியின்றி தஞ்சம் புக வேண்டி நேரும் என்றும் கூறப்படுகின்றது.

மொட்டுக் கட்சியின் ஆதரவில்லாமல் ஜனாதிபதி தேர்தல் களத்தில், ரணிலின் வெற்றி வாய்ப்புக்கான பிரகாசம் - சாத்தியம் - குன்றும் போது எத்தனை எம்.பிக்கள் அவருடைய தரப்புக்கு முண்டு கொடுத்து அமைச்சுப் பதவிக்காக தொடர்ந்து ஒட்டிக்கொண்டு நிற்பர் என்ற கேள்வியும் எழும்.

அதேசமயம் ரணிலின் அரசில் இருந்து வெளியேறி, தனித்துவம் பேண முயலும் மொட்டு கட்சி, அதற்குப் பொருத்தமான வேறு ஜனாதிபதி வேட்பாளர்கள் இல்லாத நிலையில், ஜனாதிபதித் தேர்தலை எப்படி எதிர்கொள்ளும் என்ற கேள்வியும் உண்டு.

நாளை பிறக்கும் ஏப்ரல் மாதத்தில் இக்கேள்விளுக்கு விடைகள் கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

# சம்பிரதாய அரசியல் நடத்துவதற்கு இளைஞர் இடமளிக்கப் போவதில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



அதிகாரத்தை மையமாகக் கொண்ட கலாச்சாரத்தை இளைஞர்கள் விரும்புவதில்லை. இளைஞர்கள் மற்றும் குடி மக்களுக்கு தாங்கள் விசுவாசிக்கும் மதத்தை கடைப்பிடிக்கும் உரிமை இருக்க வேண்டும். விகாரைகள், தேவாலயங்கள், கோவில்கள், பள்ளி வாசல்களில் வழிபாடுகளை தடை செய்யும், மதச் சுதந்திரத்தைப் பறிக்கும் மாற்று ஆட்சியை கொண்டு வருவதா அல்லது சுதந்திரமான சுதந்திர நாட்டை உருவாக்குவதா என்பதை மக்கள் புத்திசாலித்தனமாகச் சிந்திக்க வேண்டும். சம்பிரதாய அரசியல் நடத்துவதற்கு இனிமேல் இளைஞர்கள் இடமளிக்கப் போவது இல்லை.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மாத்தறை, மஹிந்த விஜேசேகர விளையாட்டரங்கில் நேற்று (30) நடைபெற்ற ஐக்கிய வரிசைப்படுத்தல் படையின் இளைஞர் மாநாட்டை ஆரம்பித்து வைக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

கொலை, கொள்ளை, மிரட்டல், துன்புறுத்தல்கள் மூலம் அதிகாரத்தைப் பெற அடக்கு முறைக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்ட கால கட்டம் இருந்தது. இவ்வாறான கலாசாரத்தை இனியும் அனுமதிக்க வேண்டுமா என்பதை இளைஞர்கள் சிந்தித்து புரிந்து கொள்ள வேண்டும்.

சோசலிசத்தை முன்னிறுத்தி அரசியல் செய்து வரும் காட்போர்ட் சோசலிஸவாதிகள் இலவச சுகாதாரம், இலவசக் கல்வி என்று குரல் எழுப்பினாலும், தங்கள் பிள்ளைகளை தனியார் பல்கலைக்கழகங்களுக்கும் தனியார் மருத்துவமனைகளிலும் தமது தேவைகளை நிறைவேற்றி மக்களை ஏமாற்றிவருகின்றனர். தாம் எல்லாவற்றையும் இலவசமாகப் பகிர்ந்தளிக்கின்றனர் என்று விமர்சிக்கின்றனர்.

அவர்களைப் போல் ஒருவரிடமிருந்து ஆடைகளை பெற்றுத் தன் சுய தேவைக்காகப் பாடுபடவில்லை. ஏற்றத் தாழ்வுகளை முடிந்தளவு இல்லாமலாக்கவே முயற்சித்து வருகிறேன்.

கல்வியில் ஏற்றத்தாழ்வு இருக்க முடியாது. எனவே, பிறரிடம் இருந்து பெற்று சுய தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதை விட, மக்களுக்காக எவ்வாறு சேவை செய்ய வேண்டும் என்பதை என்னிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள்.

இனிமேலும் ஒரு அரசியல் கட்சிக்கு துணைபோகும் கலாசாரத்திற்கு செல்ல வேண்டாம்.

தேர்தல் வருடமொன்றில் இளைஞர்களும், பொதுமக்களும் அரசியல் பலிகாடாகி வருகின்றனர். சம்பிரதாய அரசியல் போக்கில் பல சமயங்களில் நாட்டின் இளைஞர்கள் வழக்கமான அரசியலுக்குள் வழி தவறியிருந்தாலும், ஐக்கிய மக்கள் சக்தி நாட்டு மக்கள் கோரிய முறைமை மாற்றத்தை கடந்த 3 வருடங்களாக வார்த்தைகளால் அன்றி செயலால் நிரூபித்துள்ளது.

கொள்கையைத் தலை கீழாக மாற்றி, நாட்டின் ஆணையால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியினர் மூச்சு,பிரபஞ்சம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி மக்களுக்கும் நாட்டுக்கும் பயன் சேர்த்த ஒரே எதிர்க்கட்சியினர் நாமே.

சம்பிரதாய அரசியலுக்கு நாங்கள் அடிமைகள் அல்ல. பெரும்பான்மையான இளைஞர்கள் அரசியல்வாதிகளை நம்புவதில்லை. நாட்டின் இளைஞர்கள் வழமையான முறையை ஏற்றுக் கொள்ளவதில்லை. சம்பிரதாய அரசியலின் முறைமையின் வழமையான அடிமைகளாக ஐக்கிய மக்கள் சக்தியினர் இல்லை. சம்பிரதாயத்தை மாற்றி புதிய முற்போக்கு பநணத்தை முன்னெடுக்கும் அரசியல் சக்தியாகவே ஐக்கிய மக்கள் சக்தி தனது பணிகளை முன்னெடுத்து வருகிறது.

நாட்டின் தற்போதைய அரசியலமைப்பில் இளைஞர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படாததால், பொருளாதார, சமூக, அரசியல், கலாசார, மத உரிமைகளில் இளைஞர்களின் உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் அரசியலமைப்புத் திருத்தம் கொண்டு வரப்படும்.

அரச செய்தியாளர் சந்திப்பில், ஒரு இளம் ஊடகவியலாளர் ஆங்கிலத்தில் கேட்ட கேள்வியை, பொறுப்பான அமைச்சர் ஒருவர் செவிமெடுக்காத வகையில் தெரியாதது போல் நடந்து கொண்டமை இந்த நாட்டின் கல்வியின் பின்னடைவையே சுட்டிக்காட்டுகிறது.

பெரும்பான்மையான மக்களுக்கு இவ்வாறான முன்னேற்றம் பொதுக் கட்டமைப்பில் இருந்து ஏற்படாது.

10 இலட்சம் புதிய இளம் தொழில் முனைவோர்களை உருவாக்க ஐக்கிய மக்கள் சக்தி செயற்படும். ஆட்சியில் இளைஞர்களின் குரலுக்கு செவிசாய்க்க புதிய வழிமுறைகள் உருவாக்கப்படும்.

இளைஞர் நாடாளுமன்றங்களும் இளைஞர்களுக்கான தேசிய வேலைத் திட்டங்களும் அரச குடும்பங்களின் இளவரசர்களால் கைப்பற்றப்பட்டாலும், அரசியல் ரீதியில் தலையீடுகளில் இருந்து விடுவித்து ஜனநாயகக் கட்டமைப்பில் இளைஞர்களுக்கு உரிய இடம் வழங்கப்படும்.- என்றார்.





# திருமலையில் கடாட்சம் நூல் வெளியீட்டு விழா!

(ஹஸ்பர்ஏ.எச்.)



சம்பூர் தமிழ்க் கலாமன்றத்தின் ஒழுங்கமைப்பில் 'கடாட்சம்' நூல் வெளியீடும் இலக்கியப் பணிக்கான பாராட்டு நிகழ்வும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திருகோணமலை பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு சம்பூர் தமிழ்க் கலா மன்றத்தின் தலைவர் மருத்துவர் அ . சதீஸ் குமார் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் மங்கல விளக்கேற்றல், இறை வணக்கம், வரவேற்புரை, நூல் நயவுரை, நூல் வெளியீடு, கருத்துரைகள், பாராட்டு நிகழ்வு என்பனவும் இடம் பெற்றன.

# ஞானச்சுடர் 315 ஆவது மலர் வெளியீடு!









யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டு பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் 315 ஆவது மலர் வெளியிட்டு வைக்கப் பட்டுள்ளது.

ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் தலைமையில் திருமுறை ஓதலுடன் ஆரம்பமானது. வெளியீட்டு உரையை இளைப்பாறிய ஆசிரியர் வ.கணேசமூர்த்தி நிகழ்த்தியதை தொடர்ந்து மதிப்பீட்டு உரையைச் சைவப் புலவர் ஆசிரியர் பாபுதரன் நிகழ்த்தினார். தொடர்ந்து சிறப்பு பிரதிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் தெல்லிப்பளை யா.தந்தை செல்வா தொடக்க பள்ளிக்கு 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பரிசுப் பொருள்களும், தொண்டமனாற்றை சேர்ந்த முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட ஒருவருக் குரிய மருத்துவ உதவியாக 50 ஆயிரம் ரூபாவும் யாழ். பல்கலைக்கழக 3 ஆம் வருடத்தில் கல்வி கற்கும் மலையக மாணவி ஒருவருக்கு 90 ஆயிரம் ரூபா பெறுமதியான மடிக் கணனியும் வழங்கப்பட்டன.

வட மாகாண சமூக நிர்வாகத் தளத்தின் பளையில் இடம் பெற்ற மகளிர் தின விழாவுக்கு 150 உணவு பொதிகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை விபத்து சகிச்சை பிரிவுக்கு 30 லிட்டர் கொண்ட 40 கொள்கலன்களும், 70 லிட்டர் கொண்ட 20 கொள்கலன்களும் 3 லட்சத்து 51 ஆயிரம் ரூபா பெறுமதியில் வழங்கப் பட்டுள்ளன.

வறகொல்ல தோட்டம் சிறி முத்துமாரி அம்மன் ஆலய கட்டட நிதிக்காக 20 ஆயிரம் ரூபாவும் மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை இல்ல மெய்வல்லுனர் போட்டிக்கான நன்கொடையாக 50 ஆயிரம் ரூபா வழங்கப் பட்டன.

# விசேட பாதுகாப்புகளுக்கு மத்தியில் மன்னாரில் நடந்த ஈஸ்டர் திருப்பலி!





**(மன்னார்)**

இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா நள்ளிரவுத் திருப்பலி (ஈஸ்டர்) மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் நேற்று சனிக்கிழமை இரவு 11.15 மணிக்கு இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருக்கல் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

திருவிழாத் திருப்பலி இடம் பெற்ற போது ஆலயத்தை சூழ பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

மன்னார் மறை மாவட்டத்தில் உள்ள பல்வேறு ஆலயங்களிலும் நள்ளிரவு திருப்பலி இடம் பெற்றதோடு, தேவாலயங்களுக்கு பலத்த பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது.

இன்று (31)காலையும் திருவிழா திருப்பலி ஆலயங்களில் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

# சுவாமி விபுலாநந்த அடிகளின் 132 ஆவது ஜனன தின விழா!










உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 132 ஆவது ஜனன தின விழா கடந்த (27) புதன்கிழமை காரைதீவில் நடைபெற்றது.

காரைதீவு விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றத்தின் ஆலோசகர், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா தலைமையில் மணிமண்டப வளாகத்தில் நிகழ்வு நடைபெற்றது.

முதல்கட்டமாக நந்திக் கொடியை ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து துறவற கீதம், சரணாகதி பாடல் இசைக்கப்பட்டன. பின்னர் சுவாமியின் திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன், சுவாமி விபுலானந்த அடிகளாரின் பேத்தி திருமதி விஜயலக்ஷ்மி புவனராஜா, காரைதீவுப் பிரதேச சபையின் செயலாளர் அருணாசலம் சுந்தரகுமார் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# 24 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் வடக்கில் ஏப்ரல் 6 ஆம் திகதி கையளிப்பு



வட மாகாணத்தில் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடனும் பிரதேச மக்களின் குடி தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கவும் மேலும் 24 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முழுத் திட்டத்தால் 16 ஆயிரத்து 480 குடும்பங்கள் பயனடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி, 24 நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் ஏப்ரல் 6 ஆம் திகதி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் 6 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 18 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் திறக்கப்படவுள்ளன என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வட மாகாணத்தில் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்ட கிராமங்களில் இந்த நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அவை வவுனியா மாவட்டத்தின் வவுனியா, வவுனியா வடக்கு, வெங்கலச்சிக்குளம், வவுனியா தெற்கு பிரதேச ஆகிய செயலாளர் பிரிவுகளிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி, கரைச்சி மற்றும் கண்டாவளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

'அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர்' என்ற அரசாங்கத்தின் எண்ணக்கருவின் கீழ், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் அறிவுறுத்தலின்படி அந்த அமைச்சின் கீழ் இயங்கும் மீள்குடியேற்றப் பிரிவு சமூக நீர் திணைக்களத்துடன் இணைந்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது.

2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் 50 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டது.

இதன்படி, முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் தலா 23 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் நிறுவப்பட்டன. இதன் மொத்த திட்ட மதிப்பு 211 மில்லியன் ரூபாவாகும்.

முன்னதாக, கடந்த ஆண்டு இறுதியில், முதல் கட்டமாக, 26 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டன. இந்தத் திட்டத்தின் மூலம் 16,480 குடும்பங்கள் பயனடைவார்கள்.

இந்த நனோ நீர் சுத்திகரிப்பு இயந்திரம் நாளொன்றுக்கு சுமார் 2,000 லீற்றர் தண்ணீரை முழுவதுமாக சுத்தம் செய்யும் திறனைக் கொண்டவை என்று மீள்குடியேற்ற பிரிவு தெரிவிக்கிறது.

நனோ தொழில்நுட்பம் மூலம் நீரைச் சுத்திகரிப்பு போது நீரிலிருந்து அதிக உப்புகளை நீக்குகிறது. நனோ சுத்திகரிப்பின் மூலம் நச்சுக்கள், பார உலோகங்கள் மற்றும் ஏனைய சேதன இரசாயன உலோகங்கள் அகற்றப்பட்டு நீரின் சுவையும் துர்நாற்றமும் நீக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆவரங்கால் மகாஜனாவின் வருடாந்த விளையாட்டுப் போட்டி







ஆவரங்கால் மகாஜன வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

# சாய்ந்தமருது உணவகங்களில் சோதனை; பாவனைக்கு உதவாத உணவுகள் அழிப்பு!

## இரண்டு நாள்களாகத் தீவிர நடவடிக்கை





(நூருல் ஹுதா உமர்)

சுகாதாரமற்ற சிற்றுண்டிகள் விற்பனை செய்யப்படுகின்றன என்று கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்து உணவு பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொது மக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸஹீலா இஸ்ஸதீன் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்ஷாத் காரியப்பர் நேற்று (30) இரண்டாவது நாளாகவும் சாய்ந்தமருது பிரதேச உணவகங்களுக்கு திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

உணவகங்களை பார்வையிட்ட அவர் உணவக உரிமையாளர்களுக்கும், உணவு தயாரிப்பவர்களுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சுகாதார நடைமுறைகளை பேணி உணவுகளை தயாரிக்குமாறும் உணவகங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கீனமை, நீண்ட நாள்களுக்கு பொருத்தமில்லாதவாறு உணவுகளை குளிர்சாதன பெட்டிகளில் தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருள்களின் தரம் போன்றவற்றை சுகாதார முறைப்படி பேணுமாறும் ஆலோசனை வழங்கினார்.

அறிவித்தல்களை பேணி நடக்காத உணவகங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்திருந்தார்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம். ஜெரின் உட்பட உத்தியோகத்தர்கள் சகிதம் சாய்ந்தமருது பிரதேச உணவு தயாரிக்கும், விற்பனை செய்யும், விந பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

குறிப்பிட்ட சில உணவகங்களில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகளும் மீட்கப்பட்டன.

மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் பழுதடந்த உணவுகளை வைத்திருந்தோர் மீது எச்சரிக்கை செய்யப்பட்டனர். மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகள் அழிக்கப்பட்டன. அதே போன்று சில உணவகங்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கத் தேவையான மேலதிக ஒழுங்குகளை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

# 'நாம் கேட்கும் அரசியல்' அமைப்பு மட்டக்களப்பில் அங்குரார்ப்பணம்!









(பழுவூரான்)

'நாம் கேட்கும் அரசியல்' என்ற அமைப்பு கடந்த வெள்ளிக்கிழமை (28) கடிரீம்ஸ்பேஸ் நிறுவகத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நாம் கேட்கும் அரசியல் அமைப்பானது இளைஞர்கள், யுவதிகள் அரசியல் மற்றும் நல்லாட்சியில் பங்குபற்றுதலை ஊக்குவிக்கவும் தூய அரசியலை மக்கள் தெரிவு செய்வதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுக்க ஐ.ஆர்.ஐ. அமெரிக்க நிறுவனத்தால் நடத்தப்படும் எமெர்ஜிங் லீடர்ஸ் அக்கடமியின் செயற்றிட்டத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்கள் அமைப்பு மற்றும் எமெர்ஜிங் லீடர்ஸ் அக்கடமியின் உறுப்பினர்கள் பங்குபற்றுதலுடன், செயற்றிட்டத்தின் பிரதானி கிஷோத் நவரெட்ணராஜாலின் தலைமையில் இடம்பெற்றது.

இந்தச் செயற்திட்டமானது இளைஞர்கள், யுவதிகள் அரசியல் மற்றும் நல்லாட்சியில் பங்குபற்றுதலில் உள்ள தடைகள் மற்றும் பிரச்சினைகளின் ஆய்வின் முடிவுகளையும் காட்சிப்படுத்தி அதில் ஊடகத்தின் வகிபங்கு எவ்வாறு காணப்படுகின்றது மற்றும் ஏதிர்காலத்தில் எவ்வாறு ஊடகம் தங்களது ஒத்துழைப்பைத் தூய அரசியல் மற்றும் இளைஞர்கள், யுவதிகள் பங்குபற்றுதலை ஊக்குவிக்கச் செயற்படலாம் என்று விவாதிக்கப்பட்டு முக்கிய தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

ஊடகங்கள் மற்றும் இளையோர் அமைப்புக்கள் இணைந்து விவேகம் மற்றும் வேகத்துடன் செயற்படும் போது சிறந்த அரசியல் தலைமைத்துவங்களையும், அவர்களைத் தெரிவு செய்வதற்கான மக்களுக்கான தெளிவூட்டல்களையும் சிறந்த முறையில் வழங்க முடியும் என்று மாவட்ட ஊடகவியலாளர்கள் என தெரிவித்தனர்.

# தேசிய அடையாள அட்டை இல்லாதோருக்கு நலன்புரி நன்மைகள் இடை நிறுத்தப்பட்டன

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சுபாஜினி மதியழகன் தெரிவிப்பு



(த.சுபேசன்)

நாடளாவிய ரீதியாக தேசிய அடையாள அட்டை இல்லாத பயனாளிகள் நலன்புரி நன்மைகள் உள்ளிட்ட அரச உதவிகளை பெற முடியாத நிலை அதிகம் காணப்படுகிறது என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இலவச நடமாடும் சேவை மற்றும் சட்ட ஆலோசனை வழங்கும் நிகழ்வில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது பாரிய பிரச்சினையாக உள்ள விடயம் தேசிய அடையாள அட்டை இன்மை. இதனால் அவர்கள் நலன்புரி நன்மைகள் உள்ளிட்ட அரச உதவித் திட்டங்களை பெற முடியாத நிலை உள்ளது. அந்த உதவித் திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்ட பலருக்குத் தேசிய அடையாள அட்டை இன்மையால் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினை நாடளாவிய ரீதியாக காணப்படுகிறது. இதனால் தகுதி உள்ள பயனாளிகள் உதவித் திட்டத்தைப் பெற முடியாமல் உள்ளது.

இதன் காரணமாகவே சண்டிலிப்பாய் பிரதேசத்தில் பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்களை பெறாமல் உள்ளவர்கள், அடையாள அட்டை இல்லாதவர்களை இனங்கண்டு நடமாடும் சேவை ஊடாக அவர்களுக்கு சேவை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அதற்கான முழு அனுசரணையையும் சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையம் வழங்கியுள்ளது.

அத்துடன் சில சட்டப் பிரச்சினைகளை எவ்வாறு அணுகுவது என பொது மக்கள் சிலருக்கு தெரியாது. அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாகச் சட்டத்தரணிகள் ஊடாக இலவச சட்ட ஆலோசனையும் நடமாடும் சேவை ஊடாக வழங்கப்பட்டுள்ளது.- என்றார்.

# தற்காலக் கற்றல் முறைகளுக்கு ஏற்ப நூலகங்களை மாற்றியமைக்க வேண்டும்

## தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அபிராமி இராசதுரை தெரிவிப்பு



(த.சுபேசன்)

தற்போதைய காலகட்டத்துக்கு ஏற்ப – கற்றல் முறைகளுக்கு ஏற்ப பாடசாலை நூலகங்களை மாற்றியமைக்க வேண்டிய தேவைப்பாடு காணப்படுகிறது என்று தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி அபிராமி இராசதுரை தெரிவித்துள்ளார்.

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற நூலகத் திறப்பு விழா வைபவத்தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த நான்கு வருடங்களாக நாட்டில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக கல்வி அமைச்சால் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் நிதியூட்டம் குறைந்து சில வளங்களை பெற முடியாத நிலை காணப்படுகின்றது.

கல்வி அமைச்சானது பாடசாலை நூலகத்தில் பல்வேறு பரிமாணங்களை கொண்டு வருவதற்காகப் பாடசாலை கற்றல் வள நிலையம் என்ற பெயரில் தற்போது பாடசாலை நூலகங்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றது.

அண்மையில் கூட பாடசாலை நூலகங்களை வலுவூட்டல் மற்றும் விஸ்தரித்தல் தொடர்பான சுற்று நிருபம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய காலகட்டத்துக்கு ஏற்ப பாடசாலை நூலகங்களை மாற்றியமைக்க வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது.

புத்தகங்களுக்கு மேலாக இறுவெட்டுக்கள், இலத்திரனியல் நூல்கள், நேரடியாக ஒலிபரப்பப்படும் கல்விச் சனல்கள் போன்றவற்றை பார்வையிடக் கூடிய வசதிகள் நூலகத்துக்கு இருக்க வேண்டும்.

இலத்திரனியல் நூல்களைத் தரவிறக்கிப் பார்வையிடக் கூடிய வசதிகள் நூலகத்துக்கு இருக்க வேண்டும்.

பாடசாலை நூலகங்களுக்கான வரையறை இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டதாக காணப்படுகின்ற போதிலும் அவ்வாறான வசதி வாய்ப்புக்கள் பாடசாலைகளுக்கு கிடைப்பதில்லை.

அத்துடன் தற்போது பாடசாலை மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் குறைந்து வருகிறது.

பாட நூல்களுக்கு மேலதிகமாக வாசிப்புப் பழக்கத்தை அதிகரிப்பதன் ஊடாகவே அறிவை விசாலப்படுத்த முடியும்.

இதுவே பாடசாலை கல்வியின் பின்னர் தொழில் உலகுக்கு வழி காட்டுவதாக அமையும்.- என்றார்.

# மத்திய நிதியமைச்சர் நிர்மலாவின் சொத்து விவரம் தொடர்பில் ஆராய்வு

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அண்மையில் தனியார் செய்தி நிறுவனம் நடத்திய நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

அப்போது பேசிய அவர், "பாஜக தேசிய தலைவர் ஜே.பி.நட்டா, ஆந்திரா அல்லது தமிழ் நாட்டில் என்னை போட்டியிட வைக்க விரும்பினார். ஆனால் நான் தேர்தலில் போட்டியிட வில்லை என்று கூறிவிட்டேன். தேர்தலில் போட்டியிடும் அளவுக்கு என்னிடம் பணம் இல்லை" என்று தெரிவித் துள்ளார்.

அமைச்சர் நிர்மலா சீதாராமனின் பேட்டி குறித்து நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

கடந்த 2022 ஆம் ஆண்டு கர்நாட காவில் இருந்து மாநிலங்களவை எம். பியாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது அவர் தாக்கல் செய்த சொத்து விவரங்கள் தற்போது அலசி ஆராயப் படுகின்றன.

இதன்படி தெலங்கானா தலை நகர்



ஹைதராபாத் அருகே நிர்மலா சீதாராமன், அவரது கணவர் பரகாலா பிரபாகருக்கு சொந்தமான வீடு உள்ளது.

இதன் மதிப்பு 1.7 கோடி ரூபா ஆகும். தெலங்கானாவின் ரங்கா ரெட்டி மாவட்டம், குன்ட்லூர் கிராமத்தில் அமைச்சர் நிர்மலாவுக்கு சொந்தமான நிலம் உள்ளது. இதன் மதிப்பு 17.08 லட்சம் ஆகும். 19.4 லட்சம் ரூபா மதிப்பிலான தங்க நகைகள், 3.98 லட்சம் ரூபா மதிப்பிலான வெள்ளிப் பொருள்கள், 28,200 ரூபாவுக்கு வாங்கப்பட்ட பழைய ஸ்கூட்டர் ஆகி யவை அவரிடம் உள்ளன.

அவரது வங்கிக் கணக்குகளில் 35.52 லட்சம் ரூபா உள்ளது. மியூச்சு வல் பண்ட் திட்டத்தில் 5.8 லட்சம் ரூபா, பிபிஎப் திட்டத்தில் 1.6 லட்சம் ரூபாவும் உள்ளன.

அவரது கையிருப்பில் 7,350 ரூபா ரொக்கம் மட்டுமே இருப்பதாக 2022 பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளார். நிர்மலா சீதாராமனும் அவரது கண வரும் இணைந்து வீட்டுக் கடன் பெற்றுள் ளனர். 19 ஆண்டுகள் கால அவகாசத் தில் பெறப்பட்ட இந்த வீட்டுக் கடன் கடந்த 2022 ஆம் ஆண்டு நிலவரப்படி 5.44 லட்சம் ரூபாவாக இருந்தது. ஒட்டுமொத்தமாக நிர்மலா சீதாராமனிடம் 2.53 கோடி ரூபா மதிப்பிலான சொத் துகள் உள்ளன. இதில் 1.87 கோடி ரூபா அசையா சொத்துகளும் 65.55 லட்சம் ரூபா அசையும் சொத்துகளும் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இண்டியா கூட்டணியின் பேரணி ஊழலை மறைக்கவே நடந்தது!

## பா.ஜ.க. கடுமையாகச் சாடல்

டெல்லியில் உள்ள ராம்லீலா மைதானத்தில் நடந்த இண்டியா கூட்டணிக் கட்சிகளின் பேரணியை கடுமையாக சாடியுள்ள பாஜக, "இது ஜனநாயகத்தை காப்பாற்றுவதற்கான பேரணி இல்லை. குடும்பத்தை க் காப்பாற்றவும், ஊழலை மறைக்கவும் நடந்த பேரணி" என்று குற்றம்சாட்டியுள்ளது.

இது குறித்து, பாஜகவின் செய்தித் தொடர்பாளர் சுதான் திரிவேதி, காங்கிரஸ், திமுக, மற்றும் ஆர்ஜேடி உள்ளிட்டக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களின் ஊழல் வழக்குகளை சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் கூறுகையில், "டெல்லி ராம் லீலா மைதானத்தில் முன்பு அன்னா ஹசரே தலைமையில் 'ஊழலுக்கு எதிரான இந்தியா' என்ற இயக்கம் நடந்தது. இன்று (ஞாயிற்றுக்கிழமை) அங்கு ஊழலில் ஈடுபட்ட அனைவரும் ஒன்றிணைந்து உள்ளனர்.

பல தலைவர்களை திருடர்கள், வஞ்சகர்கள் என்று ஒதுக்கிய ஆம் ஆத்மி கட்சி இன்று அவர்களுடனேயே கை கோர்த்துள்ளது விசித்திரமான மற்றும் திகைக்க வைக்கும் காட்சியாக உள்ளது. ஊழல் வழக்குகளில் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்ட லாலு பிரசாத் இப்போது அவர்களின் தலைவர்.

அவர்கள் அனைவரும் தங்களின் பழைய பாவங்களை மறைக்கவே இங்கே ஒன்று கூடியுள்ளனர். அவர்கள் ராமர் கோயில் கட்டுவதற்கு எதிராக இருந்தனர் என்பதையும், அவர்களில் சில தலைவர்கள் இந்து மதத்தை அழிக்க அழைப்பு விடுத்தனர் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த அரசியல் கட்சிகள் இந்திய அரசியலில் நம்பிக் கையில்லாத தன்மையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.



அதேசமயம் பிரதமர் மோடி தலைமையிலான பாஜக, நம்பகத்தன்மையின் அரசியலையும், வாக்குறுதிகளை நிறைவேற்றியதற்கான சாதனைகளையும் பிரதிநிதித் துவப்படுத்துகிறது.

எதிர்க்கட்சிகள் ஜனநாயகத்தை காப்பாற்றுவதற்காக ஒன்று கூடியிருப்பதாக கூறுகின்றனர். ஆனால் அவர்கள் அனைவரும் வாரிசு அரசியலின் அமைப்பாகவே உள்ளனர். அது மற்றவர்களை ஒரு போதும் உயர அனுமதிக்காது. மக்கள் இதற்கு தக்க பதிலடி கொடுப்பார்கள்". என்று அவர் தெரிவித்துள்ளார்.

டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் கைது செய்யப்பட்டிருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சிகளின் இண்டியா கூட்டணி, இன்று ஞாயிற்றுக்கிழமை டெல்லி ராம்லீலா மைதானத்தில் பேரணியை நடத்தியுள்ளது.



# ஐ.நா. பார்வையாளர் வாகனம் மீது தாக்குதல் நடத்தியுள்ளது இஸ்ரேல்!

ஐ.நா. பார்வையாளர்கள் சென்று கொண்டிருந்த வாகனம் மீது இஸ்ரேல் குண்டு வீசி தாக்குதல் நடத்தியிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவம் தெற்கு லெபனானில் நேற்று நடைபெற்றுள்ளது.

பலஸ்தீனத்தின் காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வந்தாலும், மறுபுறம் லெபனானின் ஹிஸ்புல்லாவுடன் இஸ்ரேல் தொடர்ந்து மோதி வருகிறது.

ஆகையால் இந்த தாக்குதலின் போது ஐ.நா. அதிகாரிகள் சென்ற வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

காசா போரால் 33, 000 இற்கும் அதிகமான பலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகளே அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.



# நட்பு நாடுகளிடம் பொலிஸ் உதவி நாடியுள்ளார் பிரான்ஸ் ஜனாதிபதி

பரிஸில் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரான் தனது நட்பு நாடுகளில் இருந்து பொலிஸ் உதவியை நாடியுள்ளார். பிரான்ஸ் தலைநகர் பரிஸில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளதை தொடர்ந்து பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 22 ஆம் திகதி ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் பயங்கர தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது, அதில் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டதோடு பலர் படுகாயமடைந்தனர்.

இந்த நிலையில், பரிஸில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளதால் போட்டிகளின் போது பாதுகாப்பை உறுதி செய்வதற்கு பிரான்ஸ் நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்தோடு, பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சகம், சில குறிப்பிட்ட சிறப்புப் பொறுப்புக்களைநிறைவேற்றுவதற்காக, குறைந்த எண்ணிக்கையிலான இராணுவ வீரர்களை அனுப்பி வைக்குமாறு வெளிநாடுகளைக் கேட்டுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

பக்கங்கள் 05

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 31/03/2024

## பெரும் மக்கள் கூட்டத்தை எதிர்கொள்ளும் நயாகரா!

**அரிய சூரிய கிரகணம் ஏப்ரல் 8 காலையில்**

ஒன்ராரியோ,மார்ச்31

வடஅமெரிக்காவின் அதிசயங்களில் ஒன்றான நயாகரா நீர்வீழ்ச்சியில் இருந்து சூரிய கிரகணத்தைப் பார்ப்பதற்கான வரலாற்றுச் C2



# 2 வாகனங்கள் மோதல் மில்டனில் மூவர் சாவு!

**ஒன்ராரியோ,மார்ச்31**

**மில்டனில் சனிக்கிழமை மார்ச் 30ஆம் திகதி காலை இரண்டு வாகனங்கள் மோதிய விபத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.**

**ஆறாவது லைன் மற்றும் டெர்ரி ரோடு சந்திப்பில் 3:20 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

**இளைஞர் ஒருவர் உட்பட 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.**

உயிரிழந்தவர்களில் மில்டனைச் சேர்ந்த 18 வயது இளைஞரும், ஒரே காரில் பயணித்த பிரம்டனைச் சேர்ந்த 16 வயதுடைய பெண்ணும், மில்டனைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரும் அடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மோதல் ஏற்பட்டதற்கான காரணம் தற்போது தெரியவில்லை.

# இறால் பதனிடல் நிலையத்தில் இரவில் இடம்பெற்ற தீ விபத்து

## சந்தேகம் இருப்பதால் பொலிஸ் விசாரணை

கியூபெக்,மார்ச்31

கியூபெக்கின் வடகிழக்கு நகரமான மதானேயில் இறால் பதனிடல் நிலையத் தில் இரவு நேரத்தில் இடம்பெற்ற தீவிபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தொழிற்சாலையில் இடம்பெற்ற இந் தத் தீ விபத்தின் காரணமாக, அருகில் இருந்த பல வீடுகளைச் சேர்ந்தவர்கள் வேறிடங்களுக்கு மாற்றப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தீ விபத்து குறித்த ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது சந்தேகம் எழுந்ததன் காரணமாக, இந்த விசாரணைகளைப் பொலிஸாரிடம் ஒப்படைக் கின்றனர் என்று தீயணைப்புப் படையி னர் தெரிவித்துள்ளனர். எனினும், இந்த விபத்தின் காரணமாக இடம்பெற்ற சேத விபரங்கள் தொடர்பில் இதுவரை எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை.






# 87 வயது நபருக்கு வெற்றிகரமாக சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை

ஒன்ராரியோ,மார்ச்31

டொராண்டோ பெருநகரப் பகுதியில் வசிக்கும் முதியவர் ஒருவர் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்த மிக வயதான நபராக கின்னஸ் உலக சாதனையால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

மார்கமைச் சேர்ந்த வோல்டர் டாரோ, ஜூன் 2023இல் செயின்ட் மைக்கேல் மருத்துவமனையில் இந்த அறுவை சிகிச்சையை மேற்கொண்டபோது அவருக்கு வயது 87.

சில மாதங்களுக்குப் பிறகு, மார்ச் மாதம், கின்னஸ் உலக சாதனைகள் வயதான ஆணுக்கு சிறுநீரக மாற்றுச் சிகிச்சை பெற்றவர் என்ற பட்டத்தை டாரோவுக்கு வழங்கியது.

# கருத்தடை, நீரிழிவு மருந்துகள் அரசே விரைவில் விநியோகம்!

ஒன்ராரியோ,மார்ச்31

கனடாவில் விரைவில் கருத்தடை மாத்திரைகள் மற்றும் நீரிழிவு நோய் மருந்துகள் திட்டம் விரைவில் நடைமுறைக்கு வரும் என நிதியமைச்சரும், துணை பிரதமருமான கிறிஸ்டியா பிரிலான்ட் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதத்தில் பார்மாகெயார் சட்டம் கனடிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்த பார்மார கெயார் திட்டத்தின் முதல் கட்டம் 2024ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்துடன் அமுலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப் படும் போது, மருந்துச்சீட்டின் ஊடாக கருத்தடை மாத்திரைகள், ஹோர்மோன் சாதனங்கள் என்பன மத்திய அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்படும்.



இதற்காக கனடாவில் ஒருவர் வருடாந்தம் 150 டொலர்கள் முதல் 300 டொலர்கள் வரை செலவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**பெரும் மக்கள்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தர்ப்பமானது அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளைக் கவரும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக உள்ளூர் வரலாற்றில் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளை எதிர்கொள்வதற்கு தயாராக இருக்குமாறு நயாகரா மேயர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள் ளார்.

அரசாங்க ஊழியர்கள், முதலுதவி வழங்குபவர்கள் என அனைவரும் தயார் நிலையில் இருப்பதாக மேயர் ஜிம் டியோடாட்டி தெரிவித்துள்ளார்.

இந்த அரிய சூரிய கிரகணம் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி காலை 11:07 அளவில் மெக்சிகோவில் முதன் முதலில் தென்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

GSM
குணம்ஸ் சுப்பர் மார்க்கெட்
GUNAAM SUPERMARKET

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

# Super Deal of this Week

## till March 31st




LOWEST PRICE
8.99$
Only at GUNAAM'S SUPER MARKET

LOWEST PRICE
9.99$
Only at GUNAAM'S SUPER MARKET


4 Niru Tin fish




LOWEST PRICE
8.99$
Only at GUNAAM'S SUPER MARKET




LOWEST PRICE
LB
7.99$
Only at GUNAAM'S SUPER MARKET



ஊர் ஆட்டிறைச்சி

LOWEST PRICE
7.99$
Only at GUNAAM'S SUPER MARKET



ஊர் கோழி

## Gunaam's super market
## Good Fridayஐ முன்னிட்டு தரும் Super Deal

| | | | |
|---|---|---|---|
| Chocalate Swiss Roll | - $ 3.99 | NIRU அவித்த மா | - $8.99 |
| Maharaja Rice Flour | - $8.99 | கத்தரிக்காய் | - $1.49 1b |
| Maharaja Basmati Rice | - $13.99 | Drumstick | - $4.99 1b |
| BaBa Uppuma | - $2.99 | Small onion | - $5.99 1b |
| Nestum Serial | - $5.99 | Rasavalli | - &5.99 1b |
| MR Goudas Coconut Powder 3 For | - $10.00 | US CRAB Box | - $18.99 |
| NIRU Tin Fish 4 For | - &10.00 | இறால் | - $3.99 1b |
| AROY - D Coconut Milk Tin 4 For | - $10.00 | சுறா | - $5.99 1b |
| NIRU 8 1b Mysoor Dool | - $7.99 | திரளி | - $5.99 1b |
| NIRU 10 1b Proboiled Rice | - $8.99 | காட்டுப் பன்றி | - $5.99 1b |
| | | முழு King Fish | - $6.99 1b |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998

# கரீபியன் சமுதாயப் படையினருக்கு கனடிய வீரகள் பயிற்சி வழங்குவர்!

## ஹெய்ட்டி பணிக்கான முன்னாயத்த ஏற்பாடு

ஒன்ராரியோ,மார்ச்31

ஹெய்ட்டியில் நிலையை கட்டுப்படுத்தும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள பணிக்காக கரீபியன் சமுதாயப் படையினருக்கு பயிற்சி அளிக்கும் நோக்குடன் கனடிய படையினர் சிலர் ஜமைக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

ஜமைக்கா அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைய 70 கனடிய வீரர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனத் தேசிய பாதுகாப்புத் திணைக்களத்தின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹெய்ட்டியில் பாதுகாப்பினை மீளுறுதி செய்வதற்கு ஐக்கிய நாடுகள் அதிகாரமளிக்கப்பட்ட திட்டத்தின் ஓர் அங்கமாக ஹெய்ட்டி தேசிய பொலிஸாருக்கு உதவுவதற்கு கரீபியன் படையினருக்கு கனடிய படையினர் ஒரு மாத காலம் வரை பயிற்சி அளிப்பர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# மருந்தகத்தில் பொருள்களை கொள்ளையிட்ட இளம்பெண்


ஹாலிபெக்ஸ்,மார்ச்31 –

ஹாலிபெக்ஸின் பெயார்வீவ் பகுதியில் ஷெப்பர்ஸ் டிரக்மார்ட்டில் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மார்ச் 29ஆம் திகதி மாலை இந்த மருந்தகத்தில் பொருள்களை எடுத்துக் கொண்டு 20 வயதான பெண் ஒருவர் பணம் செலுத்ததாது செல்வதாக தமக்கு தகவல் கிடைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த மருந்தகத்தில் காவலில் ஈடுபட்டிருந்தவர்கள், பணம் செலுத்தி விட்டுச் செல்லுமாறு அந்தப் பெண்ணிடம் கேட்ட போது, அந்த பெண் ஊசியை வைத்து காவலர்களை மிரட்டினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இந்த சம்பவத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# ஏப்ரலில் அல்பேர்ட்டாவில் வெப்பநிலை அதிகமாகும்!

அல்பேர்ட்டா,மார்ச்31

ஏப்ரல் மாதத்தில் அல்பேர்ட்டாவில் வெப்பநிலை அதிகமாகக் காணப்படலாம் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

கல்கரி பகுதியில் மார்ச் மாதத்தில் பதிவான பல நாள்கள் பனிப்பொழிவானது, மார்ச் மாதத்தில் பதிவான அதிகளவான பனிப்பொழிவாக உள்ளது.

ஏப்ரல் முதலாம் திகதி முதல், அல்பேர்ட்டாவின் காலநிலையில் அதிகரித்த வெப்பநிலையை எதிர்பாரக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், எதிர்வரும் வாரத்தின் இறுதிப் பகுதியில் குளிர்காலநிலையை எதிர்பார்க்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



# ஓட்டிசம் சேவைகளுக்கு இந்த முறை அதிக நிதி!

ஒன்ராறியோ,மார்ச்31

கடந்த ஆண்டை விட ஓட்டிசம் சேவைகளுக்கான நிதியை 60 மில்லியன் டொலர்கள் வரை ஒன்ராறியோ அரசாங்கம் உயர்த்துகிறது.

மேலும் புதிய ஒதுக்கீடு வரவேற்கத்தக்கது என்று விமர்சகர்கள் கூறினாலும், ஆயிரக்கணக்கான குழந்தைகள் இன்னும் சிகிச்சையை அணுக முடியாதுள்ளனர் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஓட்டிசம் திட்டத்திற்காக 120 மில்லியன் டொலர்கள் வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒதுக்கீட்டுடன் ஒப்பிடும் போது, இது 60 மில்லியன் டொலர்கள் அதிகரிப்பு என தெரிவிக்கப்படுகின்றது.




# சூட்டுக் காயங்களுடன் இரு சடலங்கள் கெலோவ்னா பகுதியில் கண்டுபிடிப்பு!

பிரிட்டிஷ் கொலம்பியா,மார்ச்31

பிரிட்டிஷ் கொலம்பியா கெலோவ்னா பகுதியில் உள்ள உள்ளூர் வளாகத்தில் துப்பாக்கிச் சூடு மற்றும் தீவிபத்தைத் தொடர்ந்துஇரண்டு உடல்கள் கண்டெடுக்கப்பட்டமையை அடுத்து பொலிஸார் விசாரணை நடத்தி வரு கின்றனர்.

புதன்கிழமை பிற்பகல் ஆடம்ஸ் ரோடு பகுதிக்கு துப்பாக்கிச் சூடு மற்றும் அதைத் தொடர்ந்து கட்டடத்தில் தீப்பிடித்தது பற்றிய புகாரைப் பெற்ற பின்னர் தாங்கள் அங்கு அழைக்கப்பட்டனர் எனப் பொலிஸாரின் அறிக்கை கூறு கிறது.

அதிகாரிகள் உள்ளே நுழைந்தவுடன் இரண்டு உடல்களைக் கண்டுபிடித்தனர் என அறிக்கை கூறுகிறது, ஆனால் வேறு எந்த விவரமும் இல்லை.

புதன்கிழமை இரவு, நெடுஞ்சாலை 97 க்கு அருகில் உள்ள ஆடம்ஸ் சாலையின் 100 பிளாக்கை மூடிவிட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்,